324

.784.0954

18 APR 1941
MADRAS

ஆரிபீன்களென்னும் அவ்லியாக்களாகிய
மெஞ்ஞானக் களஞ்சியங்களான
நான்கு மஹான்களின்மீது
பாடப்பெற்ற

புகழுரைக் கீதங்கள்

ஹாபிஸ் E. M. A. R. நூரிய்யி அவர்களால்
இயற்றப்பெற்று

புதக்குடி மத்ராஸா கரீமிய்யா நிலையத்தாரின்
பொருளுதவியின் பேரில்

கூத்தாநல்லூர்
கமாலிய்யா பிரஸ் லிமிட்டெட்டில்
பதிப்பிக்கப்பட்டது.

1941

16??

புதக்குடி அரபிக்கலாசாலையின் ஸத்ரே முதர்ரிஸும்
ஆசிரியருமான

மௌலானா மௌலவி

S. N. ஹுஸைன் முஹம்மது ஆலிம்சாஹிப்

அவர்களின்

மதிப்புரை.

சர்வ துதிகளும், சர்வசக்தன் வருணனைக் கெட்டா வாசாமகோசரன் ஆண்டவன் ஜல்லஷஃனுஹுவிற்கே.

அவனது அருள் பிரவாகமும், நனிமிகு கருணைத் தொடையும் உலக மத உத்தம போதத்துவர் நபிகள் (ஸல்) அவர்கள்பாலும் அவர்களின் அடிச்சுவட்டை வழுவாது ஒழுகியுள்ள சான்றோர்கள் யாவர் பாலும் உண்டாகுக.

அன்பீர்!

ஆண்டவனின் அன்பினர் அவ்லியாக்கள் நிர்ப்பயம் அவிசனமுடையவர் என திருமறை ஸவிஸ்தாரமாகப் பகன்றுளது. இக்கீதங்களில் காணப்பெறும் சாயுட்சிய நிலையாளர் ஞான பீடத்தமர்ந்த மஹான்களான நான்கு பெரியார்களும் ஆண்டவனின் அன்பினராய நேசர்களென்பதற்கு அன்னவர்களாற்றியுள்ள தர்ம கைங்கர்ய தத்துவார்த்துவங்களே தக்க சமதரிசனமாகும்.

இதிற்றுதிக்கப்படும் பெரியார்களை நந்நாட்டிலறியாதவரில்லை யெனலாம். அவ்வித உத்கிருஷ்ண சாயுட்சிய மோன நிலையினரின் சற்போதனைகளை சிரமேற்றுங்கி நிற்போரின் ஹிருதயங்கள் இப்பாசுர மாலையை அதியன்போடு கொண்டாடுமென்பதி லையமில்லை.

இப்பாமாலையை இயற்றிய எனது நண்பரும், புதக்குடி அரபிக் கலா நிலையத்தின் ஆசிரியரும், தென்காசி வாசியுமான மௌலவி ஹாபில் E. M. அப்துர்ரஹ்மான் நூரிய்யி அவர்கட்கும், இதற்குப் பண உதவியாளராய மத்ரஸா கரீமிய்யா ஆசிரியர் M. M. அப்துல்லாஹ் அவர்கட்கும் அதன் மாணவர்கள் யாவருக்கும் எனது நன்றியும், விழைவும், வாழ்த்தும் உரித்தாவதுடன் பொதுமக்களாவரும் படித்து பல்காலும் பலனுற்றுய்விக்க இறைவனை எஞ்ஞான்றும் வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

மௌலவி S. N. ஹுஸைன் முஹம்மது.

1677

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 APR 1941

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

ஆசிரிய விருத்தம்

அல்ஹம்து லில்லாஹி என்றுதி முதலவனுக்கு
அனந்த கோடி புகழோதி
நல்வழியுரைக்கும் நன்னபிகளி னதிபரான
நாதர் மஹ்மூதின் ஸலவாத்தோதி
செல்வர்களாய் சிறப்புயர் கொண்ட அவ்லியாக்கள்
சீலமிகுகுத்புமாரைப் போற்றி
நல்லவர்களாய் தவமோங்கியே சிறந்திடும்
நால்வரின் புகழ் சாற்றுவாமே.

ஆரிபு பில்லாஹ், ஆஷிகுர்ரஸூல், பஹ்ருல் ஹகாயிக்
ஞானவாரிதி ஷம்ஸுல் உலமா மௌலானா மௌலவி அப்துல்
வஹ்ஹாப் ஹஸ்ரத் கிப்லா (குத்திஸஸிர்ருஹு) (மர்ஹூம்)
அவர்கள் மீது பாடியது.

(மாயா மதுரா முரளி கான—என்ற இசை)

பல்லவி

வேலூர் மாநகர் வாழும் மாதவர் அப்துல் வஹாபொலியே
புகழ்மிகும் அப்துல் வஹாபொலியே (வேலூர்)

சரணுபல்லவி

1 பல்கலை பயின்ற பக்தியிற் சிறந்த
கல்கும் பகலுமிறை தியானமும் நிறைந்த
கருணை தயாளப் பெருங்குண நிதியே
அப்துல் வஹாபொலியே புகழ்மிகும் (வேலூர்)

2 உயர்மிகு தீனின் ஒளி மிகுந்திலங்க
உன்னதக் கலைநெறி எங்கணும் வழங்க
அமைந்த நற்பாகியாத் எனும் நிலையம்பதி
அப்துல் வஹாபொலியே புகழ்மிகும் (வேலூர்)

3 மதம் கலை ஞானம் சிறந்தோங்கிடவே
மார்க்க அறிஞர்கள் பலர் ஏகிடவே
மனமுவந்துடற் பொருளாவி தியாகர்
அப்துல் வஹாபொலியே புகழ்மிகும் (வேலூர்)

4 மாசறும் மேனி மண்ணினில் மறைந்தும்
மங்கா நும்பெயர் மகிதலமெங்கும்
வாசம் பெற்றோங்கி வாழ்த்தியே போற்றும்
அப்துல் வஹாபொலியே புகழ்மிகும் (வேலூர்)

5 மத்ரஸா கரீமிய்யா நிஜய மாணவரும்
மாண்புடனும் புகழ் ஆற்றும் நூரியும்
அகமகிழ்ந்தே துதி நிதம் நிதம் புகன்றிடும்
அப்துல் வஹாபொலியே புகழ்மிகும் (வேலூர்)

புதக்குடி அரபிக்கலாசாலையின் மாஜி நாஜிர் ஆரிபு பில்லாஹ், பஹ்றுல் ஹகாயிக், ஞானசாகரம் மௌலானா மௌலவி அல்ஹாஜ் ஹாபிஸ் முஹம்மத் அப்துல் கரீம் சிப்லா (குத்திஸஸிர்ருஹூ) மர்ஹூம் அவர்கள் மீது பாடியது

(சுஜன ஜீவனா—என்ற இசை)

பல்லவி

ராணியூர் வாசரே எங்கள்
ரஹீமின் நேசரே புகழும் (ராணி)

அனுபல்லவி

செம்பொன் மலரடி ஏழைச்
சிறுவன் யான் தேடி ஜெய
சித்தசுத்தம் அடைந்தே நித்தம்
சீர்பெறவே தவம் அருள் குணமணி (ராணி)

சரணங்கள்

1 அறிவுஞான மதியைப்பூட்டும் அண்ணல் நாயகா
அன்னூருல் முஹம்மதிய்யின் அதிபர் தாயகா
ஆரிபானோரே அவனி போற்றும் நேசரே தினம்
அன்பாயிறை தியானமுறை
அமைந்த செல்வரே அருந்தவபதி (ராணி)

2 வேத நுட்பம் விளங்கி வல்லவனடி சென்றீர்
நாதர் நபிக்கீந்த ஸலாம் விடையதைக் கொண்டீர்
ஆதித்தன்போலே சுடராய் அமைந்தீர் புவியிலே என்றும்
அகவினேனும் உமை ஆள்வீரே எமை
ஆரணரானமெய் குருகுலகனி (ராணி)

3 மாச்சரிய மகத்தில் கொண்ட மமதையுடையார்
மாட்சிமிகு முமது போதனைச் செவியுற்றார்
மனதின்பகமை யாவும் மழுங்கியே உமை தேடி
மருவிச்சிருற்றே மறுமைப் பயன் பெற்றே
மாதவர் நீரென்றே துதிநிதம்புகல் (ராணி)

4 மஃரிபாவினகமியத்தை மாசறப்புகன்றீர்
மன்னவன் மகிழுமார்க்க வழியதில் சென்றீர்
மகிபரும் நாமம் அமைந்த எங்கள் நிலையம் மகத்வ
மத்ரஸா கரீமிய்யாவினறிவோங்கவே
அருள்புரி நூரியின் குறைதீர் (ராணி)

வேலூர் அரபிக்கலாசாலை மாஜி உதவி நாஜிர் ஸத்ரே முதர்ரிஸ் ஷம்ஸுல் உலமா ஞானசூரியன் மௌலானா மௌலவி அப்துல்ஜப்பார் ஹஸ்ரத் கிப்லா (குத்திஸஸிர்ருஹூ) மர்ஹூம் அவர்கள் மீது பாடியது.

(நீதிதானோ—என்ற இசை)

பல்லவி

அறிவுஞானம் அனந்தம் பூண்ட அப்துல் ஜப்பாரெனும்
ஆலிமே
சரிநிகரில்லா போதனை சாற்றும் ஷம்ஸுல் உலமாவெனும்
ஆலிமே

சரணானுபல்லவி

தேனினுமினிய தெவிட்டா திவ்ய
தீரப்பிரசாரக் கனியே தவமிகும்
தீனோர் புகழுமணியே
தூதரிரசூல் நாதர் நபிதம்
துலக்கும் நெறி புகல் ஆலிமே (அறிவு)

1 கலைக்கடலான கண்ணிய சீமானே
பலஉரை நிகழ்த்திடுவோனே உயருறும்
நல்வழியாற்றும் கோனே
இல்மசாம்பம் நுட்பம்பெருகி
இயப்பொருணு ஆற்றலுற்றுலிமே (அறிவு)

2 தென்தேசமெங்கும் சிறப்புடன் விளங்கும்
சிறந்தகலா நிலையம் பாக்கியாத்
ஸாலிஹா தெனு மாலையம்
தன்னில் ஞான சூரியன் போல்
மிளிர்ந்த வசீகர ஆலிமே (அறிவு)

3 உடல்பொருளாவி உண்மை தியாகி
ஆனமெய் குருயோகி உலமாக்கள்
உவந்து நிஞ்சமுகமேகி
ஊக்கமுடன் பயின்றே புகழ்ந்திடும்
உயர்மிகு காமில் ஆலிமே (அறிவு)

4 கருணை தயாளம் பொறுமை உதாரம்
நிறைந்திடும் நற்பொக்கிஷம் மத்ரஸா
கரீமிய்யா மாணவர் தினம்
களித்துத்துதித்து நூரியின் வாக்குரை
தாங்கிப் போற்றிடும் ஆலிமே (அறிவு)

ஆரிபுபில்லாஹ், ஆலிமே ஹக்கானி, மெஞ்ஞான ஸ்வரூபி
ஷைகு படே சாஹிபென்ற ஸய்யித் ஷாஹ் பத்ருத்தீன்
அஹ்மத் கிப்லா மர்ஹூம் (குத்திஸஸிர்ருஹு)
அவர்கள் மீது பாடியது.

(கதியாருமே காணேனே—என்ற இசை)

பல்லவி

செல்வக்களஞ்சிய ஞான
ஷெய்குபத்ருத்தீன் கோனே (செல்)

சரணனுபல்லவி

1 தீனின் பத்ரெனவே திகழ்ந்தீர்
தெவிட்டா உபதேசம் புரிந்தீர்
தானம் தவத்தில் சிறந்தீர்
தனியோனிறை புகல் பகர்ந்தீர் (செல்)

2 மஃரிபாவின் அகமியமே
மாசறவே உறைக்கும் பொக்கிஷமே
மன்னுனிறை தியானமே
மிளிர்ந்தோங்குமழகு நாயகமே (செல்)

3 வஃலே நிகழ்த்தும் பூங்காவில்
வந்தே ஞான முதை பருகில்
வன்னெஞ்சமுடையோருமே
வாழ்த்திப் புகழும் கற்பகமே (செல்)

4 மெஞ்ஞான ஸ்ரூபியான
அஞ்ஞான மகற்றும் பூமானே
மாதவமுற்றவரான
மகத்வ தியாக சீமானே (செல்)

5 மத்ரஸா கரீமிய்யா
மாணவர் போற்றும் நேயா
மஞ்சன் நூரி புகழ்பாடும்
மன்னவரே கண்பாரும் (செல்)

முற்றிற்று.